**லங்கா ஹொஸ்பிடல் டயக்நோஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்- 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

லங்கா ஹொஸ்பிடல் டயக்நோஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் (''கம்பனி'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2019 திசெம்பா 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள

-----------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை PED 12 | • பிரிவு 9.7 இன் படி சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டத்தின் | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் முறையாக ஒன்றிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமே லங்கா ஹொஸ்பிடல் டயக் | பொது முயற்சிகள் திணைக்களத்தில் அனுமதி பெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அடிப்படையில் இருக்க வேண்டும். மற்றும் திறைசேரி செயலாளரின் ஒப்புதல் இல்லாது எந்த திருத்தமும் அனுமதிக்கப்படாது. இருப்பினும், கம்பனி இதற்கு இணங்கவில்லை.<br>• சுற்றறிக்கையின் 9.2(டி) பிரிவின் படி நிறுவன விளக்கப்படம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி விபரமானது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். இருப்பினும், கம்பனி இதனை கடைபிடிக்கவில்லை. | நோஸ்டிக்ஸ் (பிறைவட்) லிமிடட் மற்றும் இது ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாக செயல்படுகின்றது. மேலும் LHD ஆனது லங்கா ஹொஸ்பிடல் கோபரேஷன் பி.எல்.சியின் குழு சொந்தமான துனை நிறுவனமாகும். இலங்கை ஆய்வகத் தொழில் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்ததுடன் இது மிக வெற்றித்கரமாகவும் இருக்க வேண்டும் மற்றும் இத்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க மருத்துவ ஆய்வக சேவை வழங்குநராக அடையாளம் காணப்பட வேண்டும். LHD அதன் செயற்பாடுகளை சந்தையில் உள்ள பிரஆய்வகங்களுக்கு இணையாக செயல்பட வேண்டும். எனவே, LHD சந்தையில் போட்டித்தனைமையுடன் இருக்க போட்டி சம்பளம் மற்றும் ஊதியத்தினை வழங்கும் திறமையான மற்றும் திறமையான பணியாளர்களை நியமித்து பராமரிக்க வேண்டும். எவ்வாறாயினும் மேற்கூறிய காரணணிகளால் சிறப்பு சூழ்நிலைகளுடன் நிவாரணம் பெற பொது முயற்சிகள் திணைக்களத்தினால் கூறப்பட்ட PED சுற்றறிக்கை தொடர்பாக நிறுவனம் விளக்கிளைப் பெற திட்டமிடடுள்ளது. |
| பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை PED 1/2015 | • பொது முயற்சிகள் சுற்றறிக்கை PED1/2015 யின் விதிகளுக்கு முறையாக கம்பனி அதன் பிரதான நிர்வாக உத்தியோகத்தருக்கு தொலைப்பேசிக் கொடுப்பனவு ரூபா.3,300 ஐ அதன் எல்லைக்கு மேல் வழங்கியிருந்தது.<br>• பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக கம்பனி அதன் பிரதான நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பிரதான செயற்பாடு உத்தியோகத்தர்களுக்கு முறையே 100 லீட்டர் மற்றும் 35 லீட்டர் மேலதிக எரிபொருள் கொடுப்பனவு செய்துள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறபேறு

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா.299,707,855 மற்றும் அதற்கு நேர் ஒத்த முந்நைய ஆண்டின் இலாபம் ரூபா 254,798,395 எனவே ரூபா.44,909,460 அல்லது 14.98 சதவீத அதிகரிப்பு காணப்பட்டது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

| | 2019 | 2018 |
|---|---|---|
| நடைமுறை சொத்து விகிதம் | 3.01 (தடவைகள்) | 3.60 (தடவைகள்) |
| விளைவுச் சொத்து விகிதம் | 2.74 (தடவைகள்) | 3.24 (தடவைகள்) |
| மொத்த இலாப விகிதம் | 58.86% | 52.43 % |
| பயன்படுத்திய மூலதனம் மீதான வருமானம் | 25.10% | 32.62 % |
| கியரிங் விகிதம் (Gearing Ratio) | 32,10% | தரவுகள் இல்லை |

## 3. செயற்பாட்டு பகுப்பாய்வு

### 3.1 சர்ச்சைத் தன்மை வாய்ந்த கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு நடைமுறையாக, மருத்துவரின் கருத்துக்களின் அடிப்படையில் ஆய்வக சோதனைக்கு நிறுவனம் காலாவதியான மருந்தைப் பயன்படுத்துகின்றது. | காலாவதியான கையிருப்பு பொருட்கள் தரத்துறையின் மீது கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் பயன்படுத்தப்படுகின்றள. இது மற்றும் தொழில் நடைமுறை மற்றும் காலாவதியான மறுப்பயன்பாட்டு உருப்படிகளைப் பயன்படுத்தும் போது பின்பற்றப்படும் வலுவான தரநிலை செயற்பாட்டு முறைமை (SOP) எங்களிடம் உள்ளது. | தரத்தை பராமரிக்கும் போது தொழில் விதிமுறைகள் / நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். |

## 3.2 திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| கணக்காய்வு விடயம் | | | | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | கொள்முதல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலும் பின்வரும் கொள்முதல்கள் செயற்படுத்தப்படவில்லை. | | | | | |
| | **விபரம்** | **துணை பிரிவு** | **தொடங்க குறிப்பிடப்பட்ட திகதி** | | | |
| 1. | ஸ்லைட் ஸ்டோரிங் கெபினட் | ஸ்டோபெதொலொஜி | ஜனவரி 2019 | 1 | இருக்கும் மூலதன பொருட்களை கொண்டு நிர்வகிக்கப்பட்டது. தேவை 2020 க்கு மாற்றப்பட்டது. | திட்ட செயலகத்தின் போது அசலை தொடர்ந்து கண்காணித்து புதுப்பித்தல் வேண்டும். (கொள்முதல் வழிகாட்டி 4.2.1 ) |
| 2. | IHC ஸ்டெய்னர் கைநூல் | ஸ்டோபெதொலொஜி | ஜனவரி 2019 | 2. | கொள்முதல் தாமதமானது மற்றும் இருக்கும் வளங்களுடன் நிர்வகிக்கப்பட்டது. | |
| 3. | நுண்ணோக்கி | ரோயல் ஹொஸ்பிடல் லெப் | 1ஆம் காலாண்டு 2019 | 3 | இருக்கும் மூலதன பொருட்களை கொண்டு நிர்வகிக்கப்பட்டது தேவை 2020 க்கு மாற்றப்பட்டது. | |
| 4. | நுண்ணோக்கி | காலி லெப் | பெப்ரவரி 2019 | 4 | இருக்கும் மூலதன பொருட்களை கொண்டு நிர்வகிக்கப்பட்டது தேவை 2020 க்கு மாற்றப்பட்டது. | |
| 5. | உறைதல் பகுத்துக்காட்டி | குருநாகல லெப் | டிசெம்பர் 2019 | 5 | குருநாகல – புதிய லெப் திட்டமானது 2020 ஆம் ஆண்டுக்கு மாற்றப்பட்டது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | மேசைக் கணிணி | குருநாகல லெப் | டிசெம்பர் 2019 | குருநாகல – புதிய லெப் திட்டமானது 2020 ஆம் ஆண்டுக்கு மாற்றப்பட்டது. |
| 7. | இக்குய்ப்மன்ட் இன்டபேஸ் | குருநாகல லெப் | டிசெம்பர் 2019 | குருநாகல – புதிய லெப் திட்டமானது 2020 ஆம் ஆண்டுக்கு மாற்றப்பட்டது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி பட்டியலின் படி உண்மையான ஆளணியானது அனுமதிக்கட்ட பட்டியலை விட அதிகமாக உள்ளது, 2020 ஜுன் மாதத்திற்கு எடுக்கப்பட்ட விபரங்கள் பின்வருமாறு. | | ஆளணி திருத்தங்களுக்கான குறிப்பிடப்பட்ட கால இடைவெளியில் மதிப்பாய்வு செய்து பொருத்தமான ஒப்புதலை பெறுங்கள் |

| | பதவி விபரம் | மேலதிகம் | | |
|---|---|---|---|---|
| 1.1 | அநுராதபுர மினி லெப் - மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர். | 01 | 1.1 | திட்டமிடப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு – 2019 |
| 1.2 | அநுராதபுர மினி லெப் - பயிற்சி மருத்துவ ஆய்வக தொழிநுட்பவியலாளர் | 01 | 1.2 | திட்டமிடப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு – 2019 |
| 2 | நிதி – நிர்வாகி - நிதி | 01 | 2 | 2020 இல் ஒரு நிதி உதவியாளர், நிதி நிர்வாகியாக பதவி உயர்வு பெற்றார். |
| 3 | ஹுமாடோலொஜி - பயிற்சி மருத்துவ தொழில்நுட்பவியலாளர் | 01 | 3 | மருத்துவ தொழில்நுட்ப வல்லுனரின் பதவி ஒரு பயிற்சி மருத்துவ வல்லுனரால் ஈடுசெய்யப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | கண்டி ஆய்வகம் - பதில் கடமை விற்பனை மேம்பாட்டு மேற்பார்வையாளர் | 01 | 4 | இணை விற்பனை மேம்பாட்டாளர், பதில் கடமை விற்பனை மேம்பாட்டு மேற்பார்வையாளராக பதவி உயர்த்தப்பட்டார். |
| 5.1 | லொஜஸ்டிக்ஸ் - பதில் கடமை மேற்பார்வையாளர் -விற்பனை மேம்பாட்டு | 01 | 5.1 | விற்பனை மேம்பாட்டு மேற்பார்வையாளர் பதவிக்கு பதிலாக கடமை மேற்பார்வையாளர் ஒருவர் விற்பனை பிரிவுக்கு நியமிக்கப்பட்டார். |
| 5.2 | லொஜஸ்டிக்ஸ் - இணை விற்பனை மேம்பாட்டு | 01 | 5.2 | விற்பனை மேம்பாட்டு மேற்பார்வையாளருக்கு பதிலாக இணை விற்பனை மேம்பாட்டாளர் நியமிக்கப்பட்டார். |
| 6.1 | சந்தைப்படுத்தல் - வணிக மேம்பாடு உதவி முகாமையாளர் | 01 | 6.1 | மூத்த நிர்வாக வணிக மேம்பாட்டாளர், வணிக மேம்பாடு உதவி முகாமையாளர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். |
| 6.2 | சந்தைப்படுத்தல் - நிர்வாகி – வணிக மேம்பாடு | 01 | 6.2 | விற்பனை முகாமையாளருக்கான ஆளணி நிலை மனிதவளத்திற்கும் மற்றும் நிர்வாக மனிதவள ஆளணி நிலை சந்தைப்படுத்தலுக்கும் மாற்றப்பட்டது. எனவே ஒரு நிர்வாக வணிக மேம்பாட்டு ஆளணி பதவி கூடுதலாக பிரதிபலிக்கின்றது. இருப்பினும் இந்த மாற்றம் ஆளணி பட்டியலுக்குள் உட்பட்டுள்ளது. |
| 7 | நுண்ணுயிரியல் - பயிற்சி மருத்துவ தொழில்நுட்பவியலாளர் | 02 | 7 | இரண்டு மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பதவிகள் ஒரு பயிற்சி மருத்துவ தொழில்நுட்ப வியலாளரால் ஈடுசெய்யப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | மூலக்கூறு உயிரியல் - பதில் கடமை மேற்பார்வையாளர் மூலக்கூறு உயிரியல் | 01 | 8 | மருத்துவ தொழில்நுட்பவியலாளர், பதில் கடமை மேற்பார்வையாளர் மூலக்கூறு உயிரியலாளராக பதவி உயர்த்தப்பட்டார். |
| 9.1 | மாதிரி சேகரிப்பு - ஒருங்கிணைப்பாளர் ஆய்வகம் | 01 | 9.1 | வாடிக்கையாளர் தெடர்பு அதிகாரி, ஆய்வக ஒருங்கிணைப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார். |
| 9.2 | மாதிரி சேகரிப்பு - மூத்த ஒருங்கிணைப்பாளர் - ஆய்வகம் | 01 | 9.2 | ஆய்வக ஒருங்கிணைப்பாளர், மூத்த ஆய்வக ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு பதவி உயர்த்தப்பட்டார். |
| 9.3 | மாதிரி சேகரிப்பு – மேற்பார்வையாளர் பேல்போடோமி | 01 | 9.3 | பேல்போடோமிஸ்ட், ஒரு மேற்பார்வை பேல்போடோமிஸ்டாக பதவி உயர்த்தப்பட்டார். |
| 9.4 | மாதிரி சேகரிப்பு -பயிற்சி பேல்போடோமிஸ்ட் | 03 | 9.4 | மூன்று பேல்போடோமிஸ்ட் பதவி, பயிற்சி பேல்போடோமிஸ்ட் பதவியால் ஈடுசெய்யப்பட்டது. |